©
GOVERNMENT OF TAMIL NADU
2017

**[Regd. No. TN/CCN/467/2012-14.**
**[R. Dis. No. 197/2009.**
**[Price: Rs. 2.40 Paise.**

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 76A] சென்னை, வெள்ளிக்கிழமை, மார்ச் 24, 2017
பங்குனி 11, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

*பக்கங்கள்*

**சட்டமுன்வடிவுகள் :—**

எண் 18/2017—தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. .. 2-3

எண் 19/2017—தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத் திட்டத் திருத்தச் சட்டம் .. .. 5-6

Verified RealEstate™

2017–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2017.

### *2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.*

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு.

**1.** இந்தச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் 4–ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், (b) எனும் உட்கூறில் பின்வரும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும் :– பமிள்மிணு டண்ஜுப் 16/2003.

“(b) மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டிற்கும் நிதிநிலைப் பற்றாக்குறைக்கும் உள்ள விகிதத்தை 2002–2003–ஆம் நிதியாண்டில் தொடங்கி ஒவ்வோர் ஆண்டும் நூற்றுக்கு 0.25 விழுக்காடு முதல் 0.30 விழுக்காட்டளவாக ஆண்டுதோறும் குறைத்து 2018–ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31–ஆம் தேதி வாக்கில் எட்டக்கூடிய மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டிற்கும் நிதிநிலைப் பற்றாக்குறைக்கும் உள்ள விகிதத்தை இடைக்கால இலக்காக மூன்று விழுக்காட்டளவிற்கு மிகாதவாறு குறைத்து அதன் பின்னர் அதே நிலையைத் தொடர்ந்து பின்பற்றுதல் வேண்டும்.”.

Verified RealEstate TM

**நோக்கக்—காரண விளக்கவுரை**

உதய் மின் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கடனை மாநில அரசு ஏற்றுக்கொண்டதன் காரணமாக ஏற்படும் நிதிப் பற்றாக்குறைக்காக நிர்ணயிக்கப்பட்ட நிதி மேலாண்மை இலக்குகளைப் பராமரிப்பதற்கான காலஅளவை நீட்டிப்பு செய்வதற்காக, 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 16/2003) திருத்தம் செய்வதென கருதப்பட்டுள்ளது.

**2.** இச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்கவிழைகிறது.

**D. ஜெயக்குமார்,**
*அமைச்சர், மீன்வளம், நிதி மற்றும்*
*பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

Verified RealEstate™

Verified RealEstate™

2017–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2017.**

***1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத் திட்டச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாவது ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்ட மன்றத்தில் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** (1) இந்தச் சட்டம் 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத் திட்டத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இந்தச் சட்டம் உடனடியாக நடைமுறைக்கு வரும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

50–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத்திட்டச் சட்டத்தின் 50 ஆம் பிரிவில் "மூன்று ஆண்டுகள் காலத்திற்கு" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஐந்து ஆண்டுகள் காலத்திற்கு" எனும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

Verified RealEstate ™

**நோக்க–காரண விளக்கவுரை.**

1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரகத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட எண் 35/1972) 50 ஆம் பிரிவிற்கு இணங்க நிலத்தின் அல்லது கட்டிடத்தின் மேம்பாடு வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட அனுமதி ஒவ்வொன்றும் மூன்று ஆண்டுகள் காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். மாநிலத்தில் பெரிய அளவிலான மேம்பாட்டு செயல்பாடுகள் நடைபெறாது இருக்கின்ற பொழுது 1971 ஆம் ஆண்டில் திட்ட அனுமதி செல்லுபடியாகும் கால அளவானது மூன்று ஆண்டுகள் காலமாக அறுதி செய்யப்பட்டது. வகுத்துரைக்கப்பட்ட மூன்று ஆண்டுகள் காலத்திற்குள் சிறப்பு பொருளாதார மண்டலங்கள், தகவல் மற்றும் தொழில்நுட்ப அறிவியல் பூங்காக்கள், கடைகள் மற்றும் நகரியங்கள் போன்றவைகளை மிக அதிக அளவில் மேம்பாடு அடையச் செய்யும்போது நபர்களுக்கு இடர்பாடுகள் ஏற்பட்டது. அது அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. மேலும் மனித ஆற்றல் மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்கப்பெறாது போன்ற பல காரணங்களின் விளைவாக மேம்பாட்டு திட்டங்களை உரிய காலத்திற்குள் நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படுகிறது. மேலும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அதிகார அமைப்பு மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை திட்ட அனுமதியின் செல்லுந்தன்மைக் காலத்தை நீட்டிப்புச் செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளது. அதன் காரணமாக அரசு அனுமதியின் செல்லுந்தன்மைக் காலத்தை மூன்று ஆண்டுகளிலிருந்து ஐந்து ஆண்டுகள் வரை நீட்டிப்பு செய்யும் பொருட்டு மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 35/1972–ஐ பொருந்தத்தக்கவகையில் திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**உடுமலை K. ராதாகிருஷ்ணன்,**
*வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற*
*வளர்ச்சித் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.